# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## September 16, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உலக தடகள சாம்பியன்ஷிப்பில், ஸ்வீடனை சேர்ந்த கம்பு ஊன்றித் தாண்டுதல் வீரர் அர்மாண்ட் டியூபிளான்டிஸ், 6.30 மீட்டரை தாண்டி 14-ஆவது முறையாக உலக சாதனை படைத்து 3-ஆவது முறையாக சாம்பியன் ஆனார்.
2. உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற ஃபிடே கிராண்ட் ஸ்விஸ் செஸ் போட்டியின் மகளிர் பிரிவில், இந்திய கிராண்ட்மாஸ்டர் ஆர்.வைஷாலி சாம்பியன் ஆனார்.
3. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டாவது நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பலான 'ஆந்த்ரோத்' இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.
   1. மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் கப்பல் கட்டுமான நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட இந்தக் கப்பல் இந்திய பெருங்கடலில் சீன ஆதிக்கத்தை எதிர்கொள்ள முக்கியப் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
   2. இதுகுறித்து இந்திய கடற்படை வெளியிட்ட செய்திக்குறிப் பில், 'உள்நாட்டில் 8 நீர்மூழ்கி எதிர்ப்பு கப்பல்கள் தயாரிக்கும் திட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட 2-ஆவது கப்பலான ஆந்த்ரோத் இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது. இது பாதுகாப்புத் துறையில் தற்சார்பை மேம்படுத்துவதில் ஒரு மைல்கல்லாகத் திகழ்கிறது. 77 மீட்டர் நீளமுடைய இந்த நீர் மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பலில், எறிகுண்டுகள் மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்பு ராக்கெட்டுகள் பொருத்தப்படும்.
   3. ஆத்மநிர்பர் பாரத் தொலை நோக்குத் திட்டத்தின்கீழ் 80 சதவீத பாகங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளதன் மூலம் கப்பல் கட்டுமானத்தில் இறக்குமதியை சார்ந்திருக்கும் நிலை மாறியுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.
   4. லட்சத்தீவு யூனியன் பிரதேசத்தில் உள்ள ஆந்த்ரோத் தீவின் பெயரை இந்தப் போர்க் கப்பலுக்கு சூட்டியிருப்பது கடல்சார் பிராந்தியங்களைப் பாதுகாக்க இந்தியா அளிக்கும் முக்கியத்துவத்தை வெளிக்காட்டியுள்ளது.
4. அமெரிக்கா விதித்துள்ள 50 சதவீத வரியால் ஆந்திர இறால் ஏற்றுமதி ரூ.25,000 கோடி அளவுக்கு பாதிக்கும் எனத் தெரியவந்துள்ளது. எனவே, மத்திய அரசு உரிய உதவிகளை வழங்க வேண்டும் என்று முதல்வர் என்.சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.
5. சுதேசி இயக்கத்தை ஊக்குவித்து நாடு தற் சார்பு நிலையை எட்டுவதை உறுதிப்படுத்தும் வகையில், ரசாயனம் உள்பட பெருமள வில் இறக்குமதி சார்புடைய 100 பொருள்களுக்கு இறக்கு மதிக்கான கட்டுப்பாடுகளை விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
   1. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அமெரிக்கா மிக அதிகமாக 50 சதவீத வரியை விதித்துள்ள சூழலில், இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ளஉள்ளது.
   2. இறக்குமதி சார்பைக் குறைத்து உள்நாட்டு வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல் அல்லது திறனை மேம்படுத்தும் வகையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அமைச்சகம் அடையாளம் 100 பொருள்களை மத்திய கண்டுள்ளது. குறிப்பாக, ரசாயனம், பிளாஸ்டிக், மருந்துகள் உள்பட பல்வேறு துறை சார்ந்த பொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
   3. இறக்குமதி கட்டுப்பாடு விதிக்கப்பட உள்ள இந்த 100 பொருள்களின் பட்டியல் இம்மாத இறுதியில் அல்லது அக்டோபர் மாதம் வெளியிடப்படும்.
6. மத்திய அரசு கொண்டுவந்த வக்ஃப் திருத்தச் சட்டத்தில் முக்கியமான சில பிரிவுகளுக்கு மட்டும் இடைக்காலத் தடை விதித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.
   1. முஸ்லிம்கள் தானமாகவும், நன்கொடையாகவும் அளிக்கும் நிலங்கள் மற்றும் சொத்துகளை வக்ஃப் வாரியம் நிர்வகித்து வருகிறது. இந்நிலையில் வக்ஃப் சொத்துகளின் நிர்வாகத்தைச் சீரமைக்கும் நோக்கில், 1995-ஆம் ஆண்டின்

வக்ஃபு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளும் வகையில் மத்திய அரசு வக்ஃபு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது.

ii. இந்தத் திருத்தச் சட்டத்தின் அரசமைப்புச் செல்லத்தக்க தன்மையை கேள்வி எழுப்பி 73 மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில் 5 மனுக்களைத் தேர்வு செய்த உச்சநீதிமன்றம், இந்த வழக்குக்கு‘ மறுஆய்வு: வக்ஃபு திருத்தச் சட்டம் 2025 என்று தலைப்பிட்டு, அந்தச் சட்டத்தில் இடம் பெற்ற மூன்று நடைமுறைகளுக்கு இடைக்காலத் தடை விதித்து.
   a) குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் இஸ்லாத்தை பின்பற்றுபவர்கள்தான் சொத்துகளை வக்ஃபு வாரியத்துக்கு தானமாக அளிக்க முடியும் என்ற திருத்தத்துக்குத் தடை.
   b) வக்ஃபு சொத்து அரசு நிலமா என்பதைத் தீர்மானிக்க மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துக்குத் தடை.
   c) மத்திய வக்ஃபு கவுன்சிலில் முஸ்லிம் அல்லாத உறுப்பினர்கள் எண்ணிக்கை நான்குக்கு அதிகமாக இருக்கக் கூடாது, மாநில வக்ஃபு வாரியங்களில் இந்த எண்ணிக்கை மூன்றுக்கு அதிகமாக இருக்கக் கூடாது.

7. இந்தியா-அமெரிக்கா இருதரப்பு வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்குகிறது.
   i. தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க வர்த்தக துணைப் பிரதிநிதி பிரண்டன் லின்ச் மற்றும் மத்திய வர்த்தகத் துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலர் ராஜேஷ் அகர்வால் இடையே இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.
   ii. இந்திய பொருள்கள் மீது டிரம்ப் நிர்வாகம் விதித்த 50 சதவீத வரி கடந்த மாதம் 27- ஆம் தேதி அமலான நிலையில் இருதரப்பு உறவில் விரிசல் ஏற்பட்டது.
   iii. இதனால் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதிசெய்வது தொடர்பாக 6-ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவுக்கு ஆக.25 முதல் 29 வரை அமெரிக்க வர்த்தகக் குழு மேற்கொள்ளவிருந்த பயணம் ரத்தானது.
   iv. இந்நிலையில், கடந்த வாரம் இந்தியாவுடனான உறவு சிறப்பானது எனவும், விரைவில் இந்தியாவுடன் வர்த்தகப் பேச்சுவார்த்தை நடைபெறும் எனவும் டிரம்ப் கூறினார். டிரம்ப்பின் இந்தக் கருத்தை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார்.
   v. மேலும், இந்தப் பேச்சுவார்த் தையில் ஒப்பந்தத்தை இறுதி செய்வது தொடர்பான முடிவு எட்டப்படவாய்ப்புள்ளதாகவும் அமைச்சகம் தெரிவித்தது.

8. அமெரிக்காவில் டிக்டாக் செயலிக்கு தடை விதிக்கும் விவகாரத்தில் சீன அரசுடன் உடன்பாடு ஏற்பட்டுள்ளதை அந்த நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் சூசகமாக தெரிவித்துள்ளார். இது குறித்து தனது ட்ரூத் சோஷியல் சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் கூறியுள்ளதாவது: அமெரிக்க மற்றும் சீன அதிகாரிகளுக்கு இடையிலான சந்திப்பு சுமுகமாக இருந்தது.
   i. அப்போது, நாட்டின் இளைஞர்கள் மிகவும் விரும்பி பாதுகாக்க நினைக்கும் ஒரு குறிப்பிட்ட நிறுவனம் தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்று அந்தப் பதிவில் டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.
   ii. சீனாவைச் சேர்ந்த டிக்டாக் செயலி உரிமையாளரான பைட்டான்ஸ் நிறுவனத்தை மறைமுகமாகக் குறிப்பிட்டு டிரம்ப் இவ்வாறு தெரிவித்துள்ளதாகக் கருதப்படுகிறது.